(ஆ) பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜேம்ஸ், அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

'That the attack on the students of the St. Xavier's College, Palayamcottah, within the College premises by outsiders in the presence of the Police on 15th February 1972 following the attempted black flag demonstration by those students against the Minister for Health.'

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 15—2—1972 அன்று மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கல்லூரியில் இருக்கும் கல்லூரி யூனியன் அங்கத்தினர்களில், 35 பேர்களில் 28 அங்கத்தினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, அமைச்சரவர்கள் மாணவர்களின் எதிர்ப்பை மதித்து, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டாம் என்று தீர்மானித்து, கலந்து கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆக, அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை. இருந்தாலும், ஒரு வேளை அமைச்சரவர்கள் அங்கே வருவார்களோ என்று எண்ணி, அப்படி அமைச்சர் வருவதை எதிர்க்கின்ற மாணவர்கள், அமைச்சரவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று முடிவு செய்து, போலீஸ் இலாகாவிற்கும் அதுபற்றி அறிவிப்புக் கொடுத்துவிட்டு, கல்லூரி நிர்வாகத்தினருக்கும் அறிவிப்புக் கொடுத்து விட்டு, கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படி ஏற்பாடு செய்து கல்லூரி விளாகத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அமைச்சர் வருவதாக இருந்து வரவில்லை என்ற காரணத்தால், அந்தச் செய்தியை அறிந்ததும், தமிழர் படை என்ற ஒரு வகுப்பினர் அந்தக் கல்லூரி விளாகத்திற்கு வந்து, அங்கே நுழைந்து, கருப்புக் கொடி காட்ட முனைந்தவர்களை தாக்கியிருக்கிறார்கள். ஆக அந்த நிகழ்ச்சி நடைபெறும் போதே அங்கே போலீஸ்காரர்களும் நின்று கொண்டு இருந்திருக்கிறார்கள். போலீஸ்காரர்களும் அந்த நிகழ்ச்சி நடைபெறாமல் தடுக்காமல், மாணவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். பின்பு தாக்கப்பட்ட மாணவர்கள்

பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார்கள். அன்று மாலையில், அந்த மாணவர்களைத் தாக்க வருகிறார்கள் என்கிற செய்தியை அந்த மாணவர்களும், ஆஸ்பத்திரி நிர்வாகிகளும் அறிந்து, மாணவர்களை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றி இருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சி சென்ற மாதம் 15-ம் தேதி நடந்திருக்கிறது. நான் கூட அப்பொழுது வேறு காரியமாகப் பாளையங்கோட்டைக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது கல்லூரியில் பார்த்தேன்; பாளையங்கோட்டை மருத்துவ நிலையத்திலும் பார்த்தேன். நானே நேரிடையாகப் போய் விசாரித்து இந்த நிலைமைகளை அறிந்து வந்தேன், என்பதை மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆக, இந்த நிலை பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியில் மட்டுமின்றி, தமிழ் நாடு பூராவும் நடைபெறுகிறது; திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்கள், மாணவர்கள், மத்திய அரசாங்கத்தவர்கள் யாராக இருந்தாலும், தாங்கள் விரும்பாதவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டலாம் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்திராத மற்ற தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றவர்களுக்கு அப்படிப் பட்ட உரிமை மறுக்கப்படுகிறது என்கிற நிலைதான் இருக்கிறது. இதை பல்வேறு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டு கின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தால், இங்கே ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறதா இல்லையா என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது என்பதை தலைவர் அவர்களே தங்கள் மூலம் முதல் அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆக இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தை விவாதிக்க, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள செயிண்ட் சேவியர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் விவாதிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். மாணவர் பேரவையில் 15—2—1972 அன்று நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மாண்புமிகு

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அழைக்கப் பட்டிருந்தார்கள். மாணவர்களிடத்தில் மாச்சரியம் ஏற்பட்டிருந்தால், அந்த மாச்சரியத்தை அதிகமாக வளர்க்க வேண்டாம் என்ற வகையில் அமைச்சரவர்கள் அந்த நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு கல்லூரிக்கு எதிரே மாணவர்களிடையே சச்சரவு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் லத்தி சார்ஜ், தடியடி ஒன்றும் நடைபெறவில்லை. கருப்புக் கொடி காட்டும் முயற்சியும் தடுத்து நிறுத்தப்படவில்லை. பல இடங்களில் கருப்புக் கொடி காட்டுகிறார்கள். கருப்புக் கொடி காட்டும் அளவுக்கு வெறுப்புணர்ச்சி இருந்தால், அந்த முயற்சிகளுக்கு இடம் தந்து கொண்டுதான் இருக்கிறோம்.

ராஜபாளையத்தில் கூட கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்றவர்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்து இருந்தோம். அப்படி இருந்தும், அமைச்சர் மாதவன் வரும்போது, அவர்களுடைய காரை கழியாலும், தடியாலும் அடித்து காரை சேதப் படுத்தும் அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும், விளக்கை அணைக்காமல் கருப்புக் கொடி காட்ட அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதன் பிறகு முதல் அமைச்சரவர்களும், நாங்களும் வருகிறபோது கருப்புக் கொடி காட்டி இருக்கிறார்கள். கொடிகள் கட்ட குச்சிகளே போதும். இருந்தாலும், அவைகள் தடிகளிலும், தடிக்கம்புகளிலும் இருந்தன. கொடிக்கு குச்சியே போதும் என்று அவர்கள் இல்லை. இருந்தாலும்கூட, கறுப்புக் கொடிகள் காட்ட அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அண்மையில் திருப்புவனத்திற்கு நான் போன போது கூட, கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்தார்கள். வெறுப்புணர்ச்சியைக் காட்டும் அளவுக்கு கறுப்புக் கொடி காட்ட அனுமதிக்கப் படவில்லை என்பதில்லை. அனுமதி வழங்கப்படுகிறது, வன்முறையைக் கையாளாத வரையில். பாளையங்கோட்டையில் அதற்குப் பிறகும் போலீசார் தடியடி, லத்தி சார்ஜ் நடைபெற வில்லை. இருசாராருக்கும் இடையே சச்சரவு ஏற்படும் என்கிற சூழ்நிலையில் அமைச்சர் போகாமல், போலீசார் தலையிட்டு ஓரளவுக்கு அமைதி ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் கலைந்து செல்லவும் வழிவகை செய்திருக்கிறார்கள். பெறும் நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்று போலீஸ் தரப்பினர் அறிவித் திருக்கிறார்கள். இப்பொழுது அங்கே அமைதி நிலவுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தடியடி போன்ற வேறு நிலைகள் அங்கே ஏற்படவில்லை. அங்கே அமைதி நிலவுகிறது, என்று கருதுவதால். இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு கிளாரிபிகேஷன் சார். என் ஒத்தி வைப்புத் தீர்மானத்திலும் நான் லத்தி சார்ஜ் நடந்ததாகக் கூறவில்லை. நான் கூறியது ப்ளாக் ஃப்ளாக் டெமான்ஸ்ட்ரேஷன் செய்யவிருந்த மாணவர்களை வெளியார் வந்து தாக்கியிருக்கிறார்கள் என்பது. அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேலும் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழர் படை என்று ஏதோ பாளையங்கோட்டையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி மதுரையில் இருக்கிறதாகத்தான் தெரியும். அதையும் கூட வேண்டாம் என்று தான் சொல்லியிருக்கிறது. திருநெல்வேலியில் அப்படிப்பட்ட படை இல்லை. சமாதானத்தை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, விபரீத விளைவுகள் ஏற்படாமல் போலீசாரே தடுத்து நிறுத்தி, அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதுதான் போலீஸ் தரப்பினர் கொடுத்திருக்கும் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) திருப்பூர் பனியன் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதன் விளைவுகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பொன்னப்ப நாடார். திரு. க. சுப்பு, திரு ஜே ஜேம்ஸ் திரு வா மை அப்துல் ஜப்பார், திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'About 8,000 workers of Banian Factories in Tiruppur went on strike since 7th February 1972 to press their demands. Due to continued strike the production has seriously suffered resulting in heavy loss besides the workers losing their wages for a number of days continuously adding labour unrest in Tamil Nadu.'